தினமலர்
உண்மையின் உரைகல்

உலக தமிழர் செய்திகள்

# ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) நோன்புு திறப்பு நிகழ்ச்சி

ஆகஸ்ட் 05,2012 IST

Comments

சிங்கப்பூர்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), பென்கூலன் பள்ளிவாசலில் நோன்பு திறப்பு நிகழ்ச்சியை நடத்தியது. சிங்கப்பூரின் ஒற்றுமை, இன மற்றும் சமய நல்லிணக்கத்தைப் பறைசாற்றிய இந்நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக சட்ட, வெளியுறவு அமைச்சர் கா. சண்முகம் கலந்து கொண்டார்.



View More Photo

நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினராக நீ சூன் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், சுகாதார மற்றும் போக்குவரத்து அமைச்சுக்கான நாடாளுமன்றச் செயலாளருமான முஹம்மது பைசல் இப்ராஹிம் கலந்து கொண்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்விப்பணிகளை ஆற்றிவரும் இச்சங்கம், சிங்கப்பூரின் சிறைக் கைதிகளுக்கு நல்லுபதேசம் வழங்கும் சேவையில் ஈடுபடவிருப்பதாக அறிவித்தார், சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர்.

ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், சமூகத் தலைவர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வு, தேசிய தின வாழ்த்துக்களைக் கூறி, இனிதே நிறைவுற்றது.



